பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ சிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: புரட்டாசி 24உ (10—10—67) செவ்வாய் வெளியூர்: புரட்டாசி 25உ (11—10—67) புதன் [இதழ்: 98

திருச்சி மாவட்டச் சீரணியின் ஆக்கப்பணி

குடுமியான்மலையில் 40 ஏக்கர் நில மீட்சி

திருச்சி, அக். 10—

புதுக்கோட்டைப் பகுதி குடுமியான்மலையில் உள்ள 1,000 ஏக்கர் நிலத்தில் இதுவரை 40 ஏக்கரில் மீட்சி வேலை நடைபெற்றிருக்கிறது. 3 கிணறுகள் தோண்டப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளன.

அடிபட்ட புலி மறைந்திருக்கிறது!

அதனை அடியோடு வீழ்த்த இது ஒரு நல்ல வாய்ப்பு!

'ஆட்சியின் சாதனைகளைக்காட்டி வெற்றியை ஈட்டுவீர்'-கழகத் தோழர்களுக்கு அறிஞர் அண்ணா வேண்டுகோள்

சென்னை, அக். 10—

"அடிபட்ட புலி பதுங்கத்தான் செய்யும்; 'புலி அடிபட்டுவிட்டது; இனி ஆபத்தில்லை' என்று கருதினால், அடிபட்ட புலி, சமயம் பார்த்து வேகமாகப் பாயும்!

"'அடிபட்ட புலிதானே' என்று துப்பாக்கியில் தோட்டாவைப் போடாமல் துப்பாக்கியின் குதிரை (விசை)-க்குப் பக்கத்தில் அலட்சியமாகக் கையை வைத்துக் கொண்டிருந்தால், அடிபட்ட புலி அதிவேகமாகப் பாய்ந்து – தோட்டா இல்லாத துப்பாக்கியைத் தூக்கிவரும் நபரைத் தாக்கும்! இது, காட்டுக்கு மட்டும் பொருந்துவதல்ல—நாட்டுக்கும் பொருந்தும்!

"காங்கிரசு என்பது, அடிபட்ட புலி! இப்போது அது பதுங்கியிருக்கிறது! அது, இலேசான புலியல்ல! அந்தப் புலி சுற்றாத காடில்லை! குடிக்காத இரத்தமில்லை! மிரட்டாத நபரில்லை! எப்படியோ அந்தப் புலி உங்களால் அடிபட்டுவிட்டது! அடிபட்டுவிட்டதாலேயே, 'அது இறந்துவிட்டது' என்று பொருள் அல்ல! அடிபட்ட ஆத்திரத்தோடு புதரிலே மறைந்திருக்கிறது—புதர் அருகிலே உறுமலும், பயங்கரச் சத்தமும் கேட்கின்றன!

"நம்முடைய தோழர்கள்கூடச் சிலர், 'ஏன் காங்கிரசுக்காரர்கள், நாம் நல்லது செய்தாலும் பாராட்டமாட்டேன் என்கிறார்களே' என்று கேட்கிறார்கள்! அடிபட்ட புலி அது! உறுமாமல்--பயங்கரமாகச் சத்தம் போடாமல், புல்லாங்குழல் இசைபோல--குயில் மொழி கீதம் போலவா பாடும்?

"பதவியிழந்த காங்கிரசுக்காரர்களும் அதைப் போலத்தான்! நம்மைக் கண்டதும் புன்முறுவல் பூத்து, 'வாழ்க' என்றா கூறுவார்கள்? பார்த்தவுடனே, 'பாவிப் பயல்; தட்டிப் பறித்துக் கொண்டானே' என்றுதானே பேசுவார்கள்?

"ஆகவே, நாம் விழிப்புடன்--அமைதியாய்--ஆனால் அதே நேரத்தில் ஆர்வத்தைக் குறைத்துக் கொள்ளாமல் பணியாற்றி—வெற்றி பெற்ற பிறகு வேண்டுமானால் விசிறியை எடுத்து வீசிக்கொண்டு, 'என்ன சௌக்கியமா?' என்று கேட்கலாம்—ஆனால் இப்போது வியர்வை சொட்டச் சொட்ட--கால் கடுக்கக் கடுக்க--கை வலிக்க வலிக்க ஒவ்வொருவரையும் சந்தித்து, கைகளைப் பிடித்துக் குலுக்கி ஓட்டுக் கேட்க வேண்டும்; தெருத் தெருவாக நடந்து சென்று ஓட்டுக கேட்க வேண்டும்; நமது கருத்தை எடுத்துரைக்க வேண்டும். இந்தத் தேர்தலை ஒரு வாய்ப்பாகக் கருதிக் கொண்டு, தமிழக அரசின் சாதனைகளை எடுத்துரைக்க வேண்டும். உங்களுக்கு விடுத்த சவாலாக—அறைகூவலாக எடுத்துக்கொண்டு பணியாற்ற வேண்டும்"

—என்று அறிஞர் அண்ணா அவர்கள், நேற்று தேனாம்பேட்டையில் நடைபெற்ற தென் சென்னைத் தேர்தல் பிரசாரத் துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள். அவர் மேலும் விளக்கியதாவது:—

மார்ச் 6-ந்தேதியன்று, 'தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்கும்' என்று நான் கையெழுத்திட்ட பிறகு, நீங்கள் நிமிர்ந்து நின்றீர்கள்! அதுவரை, உங்களிடம் பேசக் கூச்சப்பட்டவர்கள்—வலிய வந்து பேசினார்கள்! அதுவரை நேசமற்று இருந்தவர்கள்—அப்போது வந்து, 'ரொம்ப நாளாக உன்னோடு எனக்கு நேசம்' என்றார்கள்!

உங்கள் நடையிலே ஒரு கம்பீரம்! உங்கள் கண்களிலே ஒளி! உங்கள் நெஞ்சிலே நம்பிக்கை!

இவையெல்லாம் அழிந்துபடாமலிருக்க வேண்டுமானால், இந்த இடைத் தேர்தலில் மாறன் வெற்றி பெறவேண்டும்!

இவையெல்லாம் வளர வேண்டுமானால், இந்த இடைத் தேர்தலில் மாறன் வெற்றி பெற வேண்டும்!

மாறன் வெற்றி பெற்று நாடாளுமன்றத்திற்குச் சென்று, அவரை மனோகரன் மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க—மாறன் அவர்களுக்கு ஒரு வணக்கம் செலுத்துகிறபோது—நாடாளுமன்றத்திலே, தமிழக அரசையே காண்பார்கள்!

மாறனைப் பார்க்கிறபோது, டில்லியிலுள்ளவர்களுக்கு, மாறன் தெரியமாட்டார்—என் நினைவு தான் வரும்!

தி. மு. கழக அரசிற்கும்—எனக்கும் நீங்கள் தரும் கௌரவமும் மரியாதையும் காக்கப்பட—தலைநகரில் தமிழக அரசுக்கு இருக்கும் கவுரவமும் மரியாதையும் காக்கப்பட — நீங்கள் மாறனை வெற்றிபெறச் செய்யவேண்டும்.

அதற்காக நான் உங்களிடம், சொத்தைச் சரக்கைக் காட்டவில்லை—அயன் சரக்கைத்தான் காட்டியிருக்கிறேன்! அது, தன்னாலேயே விலை போகிற சரக்கு! ஆனால், அதோடு என் முத்திரையும் இருக்கிறது!

அறிவிப்பு

நாளை (11—10—67) நமது அலுவலகத்திற்கு விடுமுறையாகையால் 'நம்நாடு' அடுத்த இதழ் 12—10—67 அன்று சென்னையிலும், மறுநாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

இதற்குப் பிறகும் அந்தச் சரக்கு விலை போகவில்லை என்றால், மார்க்கெட்டில்தான் ஏதோ கோளாறே தவிர, சரக்கில் கோளாறு எதுவுமில்லை!

'நான்கு சுவர்களுக்கு மத்தியில் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்த என்னை, தேர்தலில் நிற்கச் செய்துவிட்டார், அண்ணா' என்று மாறன் கூறினார்; பல வருடங்களாக அவ்விதம் பணியாற்ற நான் அவரை அனுமதித்திருந்தேன்; 'இன்னும் எத்தனை நாளைக்கு அவ்விதம் இருப்பது' என்றுதான் அவரை அழைத்தேன்!

'இரும்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது; சிறுத்தையே வெளியில் வா' என்று புரட்சிக் கவிஞர் பாடினாரே—அதைப்போல், மாறனைப் பார்த்து, 'வெளியே வா! பரந்த உலகைப் பார்—பாராளுமன்றத்தைப் பார்—அங்கே குவிந்து கிடக்கிற அதிகாரங்களைப் பார்—அவற்றில் எதை எனக்கு வாங்கிக் கொடுக்கப் போகிறாய்? டில்லியிலுள்ள 24 பேருடன் நீயும் சேர்ந்து எனக்கு எதைப் பெற்றுத் தரப் போகிறாய்?' என்று கேட்கத்தான், மாறனை வேட்பாளராகத் தேர்ந்தெடுத்தேன்.

நான் அவரைத் தேர்ந்தெடுத்தது, நம்பிக்கையான ஆதாரத்தின் மீது—ஆசை காரணமாக அல்ல! தனிப்பட்ட ஆசை இருந்தால், அவருக்கு சரிகை வேட்டி வாங்கித் தரலாம்! 'மாறன் அங்கே இருப்பது, தமிழினத்தின் பெருமையை அறிவிக்க' என்பதால் அவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்!

தமிழன், உலகில் எங்கு சென்றாலும்—தனியாகவே சென்றாலும்—தனக்கென இருக்கும் பண்பை -- ஆற்றலை உலகு அறிந்துகொள்ளச் செய்வான்!

முன்னேற்றக் கழகம் என்றால், 'படிப்பறியாத—பண்பறியாத வாலிபர்கள்; அனுபவமறியாத முதியவர்கள்தான்' என்ற நினைப்பை, பேராசிரியர் அன்பழகன்—மனோகரன் போன்றவர்கள் டில்லி சென்ற பிறகு மாற்றினார்கள்!

கல்லூரிப் பேராசிரியராயிருந்த அன்பழகன்—அதை விட்டுப் பொதுப்பணியில் ஈடுபட்டு—தி. மு. கழக நாடாளுமன்ற உறுப்பினராக வந்திருக்கிறார்

(3-ம் பக்கம் பார்க்க)

சேத் கோவிந்ததாஸ் பேசியது, அப்படியொன்றும் சின்ன விஷயம் அல்ல—தள்ளி ஒதுக்கிவிடுவதற்கு!

ஆனால் இங்கே உள்ள காங்கிரசுக்காரர்கள் — பட்டணத்துப் பாணியில் குறிப்பிடுவதென்றால் — 'சேத்' பேசியதைக் 'கண்டுகொள்ள'வே இல்லை!

'மெயில்' இதழ், 'சைத்தான் வேதம் ஓதுகிறது' என்று தலையங்கமேகூட எழுதிற்று! மற்ற செய்தித்தாள்கள், 'தென்னகம் இந்தியை எதிர்த்தால் சென்னைக்கு இராணுவத்தையே அனுப்பி அடக்க வேண்டும்' —என்று அவர் பேசியதை — முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன!

ஆனால் இந்த நிமிடம்வரை பார்க்கிறேன் – 'காங்கிரசுக்

காரர்கள் ஏதாவது சொல்வார்களா' என்று! எதையும் காணோம்!

இலையிலேகூட், 'தொட்டால் சுருங்கி' என்ற ஒரு தாவர இனம் இருக்கிறது; ஆனால் இந்தக் காங்கிரசு இனத்துக்கோ, பட்டால் கூடப் புத்திவராது போல் இருக்கிறது! கொட்டினால் கூட வலி தெரியாதுபோல் இருக்கிறது! சுட்டால்கூட சூடு கிடைக்காதுபோல் இருக்கிறது!

"என்ன 'பாவ'மய்யா செய்துவிட்டோம்--இராணுவத்தை அனுப்பச் சொல்கிறீர்?" என்று, காங்கிரசுக்காரர்கள் கேட்க வேண்டாம் — பக்தவத்சலமாவது கேட்டிருக்கக்கூடாது?

"ஏதடா இது? காங்கிரசுக்காரர் வேறு—பக்தவத்சலம் வேறா?" என்று யோசனை செய்யாதீர்கள்!

பக்தவத்சலத்தை ஏன் தனிமைப்படுத்தினேன் என்றால், இராணுவத்துக்கும்—அவருக்கும் கொஞ்சம் தொடர்பு உண்டு. மொழிக்காக முன்பே ஒரு முறை, இராணுவத்தைக் கூப்பிட்டவர் அவர்!

பெற்றவர்களே பிள்ளைகளை மதிக்கவில்லை என்றால், மற்றவர்கள் உதாசீனம் செய்யக் கேட்பானேன்?

'சேத்'தைக் கேட்டால், "உங்கள் பக்தவக்சலம், முன்பு இராணுவத்தை அவராகவே கூப்பிட்டாரே—அப்போது மட்டும் இல்லாமல், இப்போது நான் அனுப்புவதாகச் சொல்வதில் மட்டும் என்ன தவறு?" என்று கூறினால், நாம் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

இன்னொருவர் இருக்கிறாரே, 'மிலிட்டேரி' பிரியர் —'அவராவது எதிர்த்து இரண்டு சொல்லுவார்' என்று எதிர்பார்த்தேன்—வாயையே திறக்கவில்லை! திலகர் கட்டத்திலே நின்றுகொண்டு 'மிலிட்டேரி வரும்னேன்'—என்று, சம்பந்தமில்லாமல் நமக்குள்ளே அவர் பேசியதுதான், இப்போது அங்கே உள்ள சேத்களுக்கு இளக்காரமாகப் போயிருக்கிறது!

"இந்தியை எதிர்த்தால், இராணுவத்தை அனுப்புவதுதானே?" என்று மத்திய அரசுக்கு சிபாரிசு செய்திருக்கிறார்!

தெற்கே பத்து அம்சத் திட்டங்களுக்கு சிபாரிசு சம்பாதிப்பதற்காக வந்த மோகன் தாரியா, சந்திரசேகர் என்ற மற்ற மாநிலத்து எம்.பி.-க்களுக்கு, சேத்தின் பேச்சின்மீது வந்த கோபம்கூட, இங்கே உள்ள நமது காங்கிரசுக்காரர்களுக்கு வராதது வருந்தத்தக்கது மட்டுமல்ல—ஆச்சரியமானதும்கூட!

எஸ். ஆர்.

அரசு ஊழியர்களுக்கு பஞ்சப் படி உயர்வு

ஆண்டுதோறும் ரூ. 7 கோடி அதிகம் செலவாகும்

நகர ஈட்டுப் படி வழங்குவதால் ரூ. 65 இலட்சம் கூடுதலாகிறது

சென்னை, அக். 9—

மத்திய அரசு ஊழியர்களுக்குத் தரப்படும் பஞ்சப் படிக்குச் சமமாக இருக்கும் அளவில் தங்கள் ஊழியர்களின் பஞ்சப் படியையும் உயர்த்தி, தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

இந்தப் பஞ்சப்படி உயர்வு, உள்ளாட்சித் துறை (நகராட்சி, ஊராட்சி) ஊழியர்கள், அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருக்கும் உண்டு.

இந்தப் பஞ்சப் படி உயர்வினால், அரசுக்கு அதிகப்படியாக ஆண்டுக்கு ரூ. 7 கோடி செலவாகும்.

முதன்முறையாக நகர ஈட்டுப் படி

நகர எல்லைக்குள் பணியாற்றும் அரசிதழ் பதிவு பெருத அரசு ஊழியர்களுக்கு ரூ. 500-க்கு மேற்படாமல் ஊதியம் பெறுவோருக்கு முதன்முறையாக அரசு, நகர ஈட்டுப் படி வழங்கியிருக்கிறது; நவ. 1-ந் தேதி முதல் இது கிடைக்கும்; இதனால் அரசுக்கு ஆண்டு முழுவதுக்குமாக ரூ. 65 இலட்சமும், நடப்பு நிதி ஆண்டில் ரூ. 25 இலட்சமும் செலவாகும்.

தமிழ்நாட்டில் 2-இலட்சம் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள்; இவர்கள் அனைவரும் பஞ்சப் படி உயர்வினால் பலன் பெறுவர்.

சென்னையில் மட்டும் அரசு ஊழியர்கள் 15 ஆயிரம் பேர் உள்ளனர்; இவர்களுக்குப் பஞ்சப்படி உயர்வுடன் நகர ஈட்டுப் படியும் கிடைக்கும்.

இந்தப் பஞ்சப படி உயர்வு அளிக்கப்பட்டதன் மூலம் மத்திய அரசு ஊழியர்களுக்குச் சமமாக மாநில அரசு ஊழியர்களுக்குப் பஞ்சப்படி உயர்த்தப்பட்டு இருக்கிறது; ஆனால், ரூ. 90 முதல் ரூ. 109 வரையில் ஊதியம் பெறுகிறவர்கள் சற்று அதிகமாகவே பெறுகிறார்கள்.

பஞ்சப் படி உயர்வையும், நகர ஈட்டுப் படி அளிப்பதையும் அரசு ஊழியர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்.

பஞ்சப் படி உயர்வு 1—11—67 முதல் அமுலுக்கு வருகிறது.

நகர ஈட்டுப் படி 1—10—67 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

பஞ்சப் படி உயர்வு அதிகபட்சமாக ரூ. 20-ம், குறைந்தபட்சமாக ரூ. 12-ம் கிடைக்கும்.

பஞ்சப் படி உயர்வு, அக்டோபர் திங்கள் ஊதியத்தில் கணக்கிட்டுத் தரப்படும்; ஆனால், நவம்பர், டிசம்பர், 1968 சனவரி, பிப்ரவரி ஆகிய நான்கு மாதங்களில் ஊழியர்களுக்குச் சேரவேண்டிய பஞ்சப் படி உயர்வு, வைப்பு நிதியில் (பிராவிடண்டு பண்டு) சேர்க்கப்படும்; அதை, வைப்பு நிதி விதிப்படி பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.

1968 மார்ச் திங்கள் ஊதியத்தை ஏப்ரல் 1-ந் தேதி பெறும் போது, பஞ்சப் படி உயர்வை ரொக்கமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

நகர ஈட்டுப் படி

அரசிதழ் பதிவு பெருத ஊழியர்களுக்கு இதுவரையில் கிடைக்கப் பெருமலிருந்த நகர ஈட்டுப் படியை தற்போது தமிழக அரசு வழங்கியிருக்கிறது.

மாதமொன்றுக்கு ரூ. 150-க்குக் குறைவாக ஊதியம் பெறுபவர்களுக்கு, ஊதியத்தில் 10 சதவிகிதம் நகரஈட்டுப் படி கிடைக்கும்; இது குறைந்தபட்சம் ரூ. 7.50-ஆகவும், அதிகபட்சம் ரூ. 12.50-ஆகவும் இருக்கும்.

ரூ. 150-க்கு மேல் ரூ. 500 வரையில் ஊதியம் பெறுவோருக்கு ஊதியத்தில் 8 சதவிகிதம் கிடைக்கும்; இவர்கள், குறைந்தபட்சமாக ரூ. 12.50 பெறுவார்கள்.

ரூ. 501 முதல் ரூ. 539 வரையில் ஊதியம் பெறுவோருக்கும் சிறிது சலுகை உண்டு.

1967 நவம்பரில் வாங்கும் அக்டோபர் திங்கள் ஊதியத்திலிருந்து சென்னை நகர எல்லைக்குள் பணியாற்றும் எல்லா அரசு ஊழியர்களுக்கும் நகர ஈட்டுப் படி தரப்படும்.

பஞ்சப் படி உயர்வு பட்டியல்

ஊதியம்	பழைய பஞ்சப் படி	புதிய பஞ்சப் படி	உயர்வு
ரூ. 89 வரை	ரூ. 47	ரூ. 59	ரூ. 12
ரூ. 90 முதல் ரூ. 149 வரை	ரூ. 70	ரூ. 84	ரூ. 14
ரூ. 150 முதல் ரூ. 209 வரை	ரூ. 90	ரூ. 106	ரூ. 16
ரூ. 210 முதல் ரூ. 399 வரை	ரூ. 110	ரூ. 128	ரூ. 18
ரூ. 400 முதல் ரூ. 499 வரை	ரூ. 120	ரூ. 140	ரூ. 20

ரூ. 500 முதல் ரூ. 519 வரை ஊதியம் பெறுகின்றவர்களுக்கு' பஞ்சப் படியுடன் மொத்தச் சம்பளம் ரூ. 640 ஆக வரும்படி, விலைவாசிப் படி சரிசெய்யப்படும்; அதற்கு மேல் ஊதியம் பெறுகிறவர்கள் பஞ்சப் படியில் மாறுதல் இல்லை.

உதவும் நாடுகளின் புதிய நிபந்தனை!

இந்நாட்டில் பொருளாதார மந்தம் நிலவுவதால், நடப்பு நிதியாண்டில் குறைந்த அளவில் பொருளாதார உதவியை அளிக்கவே இந்தியாவுக்கு உதவும் நாடுகள் விரும்புகின்றன.

"இந்தியாவின் பண்ட இறக்குமதித் தேவையை நிறைவு செய்ய உதவித் தொகை 60 கோடி டாலருக்கு மேல் போக வேண்டியதில்லை" என்று உலக பாங்கி நிபுணர்களும், மற்ற பொருளாதார அதிகாரிகளும் அதிகாரபூர்வமற்ற முறையில் கணக்கிட்டுள்ளதாக விவரமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

"தொழிற்சாலைகள் முழு உற்பத்தியில்—அநேகமாக இரட்டை 'ஷிப்ட்' அடிப்படையில் ஈடுபட்டாலன்றி, இத்தொகையையும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள முடியாது" என்று சில நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

துணை உறுப்புகள், மூலப் பொருட்கள்ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கான இறக்குமதி லைசென்சுகளைப் பெற தொழிலதிபர்கள் தற்போது முன்வரவில்லை; உற்பத்தியான பொருட்களுக்கான கிராக்கி குறைந்துவிட்டதே அதற்குக் காரணமாகும். உடனே மார்க்கெட் கிடைக்காத நிலையில் உற்பத்தியான பொருட்களை வீணே குவித்துவைக்க அவர்கள் தயாராக இல்லை!

நிலைமையறிய வந்தோரின் நிலைமை இது!

தங்கள் தலைக்கே மண்ணை வாரிப் போட்டுக்கொள்ள வேண்டாம்---காங்கிரசுத் தலைவர்கட்கு இடித்துரை

"அற்பத்தனமான நெருப்புக் கோழி, தன் தலையை மணலில் (இந்திப் பிரச்சினையில் புதை மணலில்) புதைத்துக்கொண்டு, உலகமே இருண்டுவிட்டதாக எண்ணுவதைப் போலக் காங்கிரசுக்காரர்கள் நடந்துகொள்வது எளிது!

"கூரைமீதேறிக்கொண்டு தங்கள் பண்புகளைப் பறைசாற்றிக்கொள்ளலாம். அதே போல், எதிரியின் இயலாமையை -- இழிதன்மையைக் குறை பேசலாம்; ஆனால், இன்றைய விழிப்படைந்த வாக்காளர்கள் முன்புபோல் இல்லாமல், நன்மைக்கும்—தீமைக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்தவர்களாய், சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள இணைப்பைப் புரிந்தவர்களாய், வெற்றியையும் தோல்வியையும் பிரித்தறியத் தெரிந்தவர்களாய் இருக்கிறார்கள் என்பதை இந்த வாய்வீச்சுக்காரர்கள் ஏனோ மறந்துவிடுகிறார்கள்!"

என்று, சென்னையில் நாடாளுமன்ற காங்கிரசு உறுப்பினர்கள் அறிவித்த கருத்துக்களை விமர்சிக்கையில், 7—10—67 'மெயில்' இதழ், 'உண்மையாய் இரு—இதுதான் காந்தி சொன்னது' என்ற தலைப்பில் எழுதியுள்ள தலையங்கத்தில் இடித்துரைத்திருக்கிறது. அந்தத் தலையங்கம் மேலும் குறிப்பிடுவதாவது:—

"நீதிக்கு மாருக—நியாயத்துக்கு முரணாகச் சில முறைகளைக் கையாளுவதென்பது, தேர்தல் நேரத்திலே இயல்புதான். அதேபோலத்தான், ஒன்றைக் கூட்டியோ, குறைத்தோ சொல்வதும் தேர்தல் நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகிற ஒன்று.

ஆனால் சில காங்கிரசு எம்.பி.-க்கள் சென்னையில் அறிவித்திருக்கும் பொய்க் கருத்துக்கள், நடைபெற இருக்கும் தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தலில், அவர்கள் கட்சியின் நலன்களையே பாதிக்கும் வகையில் திருப்பினால் என்ன ஆகும்?

கடுமையைக் கொஞ்சம் குறைத்துச் சொல்லுவதானால், அவர்கள் சொல்லியிருக்கும் கருத்துக்கள் தவருனவை மட்டுமல்ல—தலைமை அமைச்சரும், பிற காங்கிரசுத் தலைவர்களும் அறிவித்திருக்கும் கொள்கைகளுக்கே முரணானவை!

தன்னுடைய மாநிலத்துச் சிவசேனைப் பிரச்சினையில் ஒன்றும் செய்ய முடியாத மராட்டியத்து நாடாளுமன்ற காங்கிரசு உறுப்பினர் மோகன் தாரியா, தொலைதூரம் வந்து சென்னையில் இரண்டு அற்புதமான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். கூர்த்த மதி படைத்த வாக்காளர் கிடக்கட்டும் — முட்டாள்கூட இவருடைய கருத்தை ஏற்றுக்கொள்ளமாட்டான்!

'காங்கிரசால் மட்டுமே நல்லவை செய்யமுடியும்' ('நல்லவை' என்பதற்கு அவர் விளக்கம் சொல்லவில்லை) என்னும் வெறுத்தொதுக்கப்பட்ட சித்தாந்தத்தை அவர் மீண்டும் வெளியிட்டுள்ளார்; 'மத்தியிலும் மாநிலங்களிலும் ஒரே கட்சி (அவர் கருத்துப்படி காங்கிரசு) ஆட்சியில் இருந்தால்தான், நாடு உண்மையான முன்னேற்றத்தை அடையமுடியும்' என்கிறார்!

கடந்த பொதுத்தேர்தல் வரையில், நாட்டின் அரசியல் வளர்ச்சி பற்றிச் சிறிதும் அறிந்துகொள்ளாமல் நிம்மதியாக இருந்தவர்தான் திரு. தாரியா! இது சாதாரணமாக அறியாமையின்பாற்பட்டது என்றாலும், அந்த வகையில் மன்னித்துவிடலாம்.

'பல்வேறு கட்சிகள் ஆட்சிக்கு வருவது நாட்டின் சனநாயகத்துக்கு வலிவூட்டக்கூடியது' என்றும், 'இப்படி நடப்பது இந்தியப் பாராளுமன்ற [illegible]ட்சி வளர்ச்சிக்கு சரியான வழி' என்றும் த[illegible]மையமைச்சர் பலமுறை தெரிவித்துவிட்ட[illegible]பின்னரும், இவர் இவ்வளவு அறியாமையில் [illegible]ருக்கக்கூடாது!

நிலை[illegible]மையறியும் பொருட்டு வந்த காங்கிரசுக் [illegible]ழுவைச் சேர்ந்த மற்றும் இரு உறுப்பினர்கள், [illegible]மிழ்நாட்டில் என்ன நடந்தது என்பதையே புரிந்துகொள்ளவில்லை!

'தி. மு. கழகம், கொள்கையற்ற கட்சி' என்று கூறியதன்மூலம் இராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த திரு. அமிர்தநாகதா என்பவர், நகைப்புக்குத தன்னை ஆளாக்கிக்கொண்டார்!

உ. பி. மாநிலத்தைச் சேர்ந்த சந்திரசேகர், 'அண்ணதுரை, பிரிவினைக் கொள்கைக்கு உயிரூட்டியிருக்கிறாரா?' என்பதற்குப் பதில் கூறவேண்டும்.

திரு. எஸ். கே. பட்டீல் போன்ற பல காங்கிரசுத் தலைவர்கள், ஒருபுறத்தில் தி. மு. க. அமைச்சரவையின் சாதனைகளைக் குறித்துப் புகழ்ந்துரைத்துக் கொண்டிருக்கும் நேரத்தில், செங்கல்வராயன் கேட்கிறார்—'காங்கிரசால் செய்ய முடியாத எதை, இந்த ஏழு மாத காலத்தில் தி. மு. க. அமைச்சரவை செய்திருக்கிறது' என்று!

இருபதாண்டுக்காலமாக எவ்விதப் பூசல்களுக்கும் ஆளாகாமல் தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி அரசாண்டிருக்கிறது. செங்கல்வராயனே இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க முடியும்.

இவரைப் போன்றவர்கள் பதிலளிக்கமுடியாத நிலையில் இருந்ததால்தான், அவர்களுக்கு வாக்காளர்கள் சரியான பதில் கொடுத்துவிட்டார்கள்! காங்கிரசுத் தலைவர்கள். மேலும் தங்களுக்குத் தாங்களே கேடு விளைவித்துக் கொள்ளாமல் இருப்பார்களாக!

நிர்ப்பந்தம்

இன்று இந்தியாவுக்கு உதவியளிக்கும் நாடுகள் அனைத்தும், தயது பணம் அயல்நாடுகளின் உற்பத்தியைப் பெருக்கச் செலவிடப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத் தமது நாடுகளிலேயே கொள்முதல் செய்யப் பயன்பட வேண்டும் என்று இந்தியாவைக் கட்டாயப்படுத்துகின்றன; அதனால் பிரிட்டிஷ் பணத்தைப் பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் மட்டுமே செலவிட முடியும்.

குறுவைக் கொள்முதல் வெற்றிகரமாக நடைபெறுகிறது!

அமைச்சர் மதியழகன் அறிவிப்பு

கோவை, அக். 9—

"குறுவை அறுவடையில் சுமார் 4 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய [illegible]டியும்" என்று அமைச்சர் கே. ஏ. மதியழகன் கூறினார்.

அரசின் கொள்முதல் இலக்கு பற்றி ஐயப்பாடு கொண்டிருப்போரைப் பற்றி அவர் குறிப்பிடுகையில், "கோபிசெட்டிபாளையத்தில் எவ்வித எதிர்ப்புமின்றி, குறிக்கோளான 72,000 மூட்டைகள் ஏற்கனவே கொள்முதலாகிவிட்டன" என்றும் அவர் கூறினார்.

"கோவை மாவட்டத்தில் திருப்பூர் நகரைச் சுற்றியுள்ள பகுதிகள், பல்லடம் பேரூராட்சி, நம்பியூர் பேரூராட்சி ஆகிய பகுதிகளுக்கு அக்டோபர் 21 முதல் குடும்பக் கார்டு முறை நடைமுறைக்கு வரும்" என்றும் அமைச்சர் கூறினார்.

உண்மையை நாம் உணர்ந்தால்....!

"மனிதன் பிறக்கும்போது சமமாகப் பிறக்கிறான்! இறக்கும் போதும் சமமாகவே இறக்கிறான்!

"இந்த மாற்ற முடியாத உண்மையை மட்டும் நாம் உணர்ந்துவிட்டோமானால், இந்த உலகம் வாழ்வதற்கோர் உன்னதமான இடமாக மாறிவிடும்!"

---வி. வி. கிரி
(குடியரசுத் துணைத் தலைவர்)

இந்திய யோசனையை ஏற்க சீன மறுப்பு

ஆங்காங், அக். 9—

திபெத்—சிக்கிம் எல்லையிலுள்ள இருதரப்புத் தளபதிகளும் சந்தித்துப் பேசலாமென்று இந்தியா கூறிய யோசனையை சீன நிராகரித்து, அதற்கு அவசியமில்லை என்று கூறிவிட்டது.

தென் சென்னையில்....

'தி. மு. கழகம் பெறும் வெற்றி இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்தும்'

'பதவிக்காக அல்ல—தமிழைக் காக்கவே மாறன் வெற்றி பெறவேண்டும்'

பேராசிரியர் க. அன்பழகன் விளக்கம்

சென்னை, அக். 10—

"இந்த நாடு வாழ வேண்டுமானால்—நம்முடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமானால்—இந்தி ஆதிக்கம் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமானால்—அரசியல் சட்டத்தைத் திருத்துகின்ற நிலை ஏற்பட வேண்டுமானால்—தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலில் தி.மு. கழகம் வெற்றி பெற வேண்டும்.

"தேர்தல் முடிகின்ற வரையில் நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்; அண்ணாவைத் திட்டினாலும், தாயைத் திட்டினாலும், தந்தையைத் திட்டினாலும் ஆத்திரப்படக்கூடாது! ஆத்திரம், அறிவை மறைக்கும்! நீங்கள் அறிவோடு இருந்து நேர்மையான தேர்தலை நடத்தி வெற்றியைத் தேடிக்கொடுக்க வேண்டும்—இதைத்தான் அண்ணா விரும்புகிறார்!"

என்று பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ.,எம்.பி. அவர்கள், தென் சென்னையில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தென் சென்னை தி. மு. க. வேட்பாளர் 'முரசொலி' மாறன் அவர்களை ஆதரித்து திருவல்லிக்கேணி 74-வது வட்டம வெங்கட்ரங்கம் பிள்ளைத் தெருவில், அக். 8-ல் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். எஸ். துரை தலைமைவகித்தார்.

தோழர்கள் நாகராசன் எம்.சி., இளம்பரிதி ஆகியோர் பேசினர்.

இறுதியில் நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ. அவர்கள் பேசுகையில், மேலும் குறிப்பிட்டதாவது :—

"1967 தேர்தலுக்குப் பிறகுதான் நீங்கள் சனநாயக உரிமையை அனுபவிக்கிறீர்கள்.

'மக்களை அவமதித்தால், நீண்ட நாட்களுக்கு ஆட்சியில் இருக்க முடியாது' என்பதை இந்தத் தேர்தலில் நிரூபித்துவிட்டீர்கள்!

தேர்தலில் காங்கிரசுக்காரர்கள் தான் வெற்றி பெறுவார்கள் என்ற நினைப்பை மாற்றிவிட்டீர்கள்!

இன்றைக்கு நான் வெற்றி பெற்றிருந்தாலும் — என் கடமையைச் செய்யத் தவறினால்—நாளை தோற்கடிக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது!

'என்னை யாராலும் அசைக்கமுடியாது' என்று சொன்னால். 'சனநாயகம் செத்துவிட்டது' என்று அர்த்தம்!

இந்த ஐந்தாண்டுக் காலத்தில் ஆட்சியின் பலனை நீங்கள் அனுபவிக்கத் தவறினால் — 'இந்த ஆட்சியைவிடக் காங்கிரசுக் கட்சியே பரவாயில்லை' என்ற எண்ணம் வருமானால்—மாற்றுகிற உரிமை உங்களுக்கு உண்டு! அதற்குத்தான் சனநாயக உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது!

ஒரே கட்சி ஆட்சியை—ஒரே வகையான ஆட்களை—பொது மக்களோடு தொடர்புகொள்ளாதவர்களை மாற்றி இருக்கிறீர்கள்!

இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கிற அமைச்சர்களைப் பார்க்க வேண்டுமானால், தூங்குகிற நேரம் தவிர மற்ற நேரங்களில் பார்க்கலாம்!

பொதுமக்களைப் பார்க்காத அமைச்சர்கள், மதிக்காத அமைச்சர்கள் யாராவது இந்த அமைச்சரவையில் இருக்கிறார்களா ?

மக்களை மதிக்க மறுக்கின்ற அமைச்சர்கள் இன்று உண்டா?

காங்கிரசுக் கட்சி ஆட்சிக் காலத்தில் இப்படி உண்டா? மாணவர்கள் ஊர்வலமாக வந்து வேண்டுகோள் விடுக்க—அதை ஏற்றுக்கொள்ள மறுத்தவர் தான் பக்தவத்சலம்!

இன்றைக்கு 5 மாணவர்கள், 'இந்திரா காந்தியைச் சந்திக்க வேண்டும்' என்று கூறியதும், அண்ணா ஏற்பாடு செய்தார்—கறுப்புக் கொடி நிகழ்ச்சியைத் தடுத்து நிறுத்தினார்!

மாதவனுக்குக் கறுப்புக் கொடி காட்டிய நேரத்தில், 'இவர்களைப் பார்க்க மாட்டேன்' என்று வேறு பக்கம் போனாரா?—இல்லை; கறுப்புக் கொடி காட்டியவர்களிடம் போய் அவர்களுடைய வேண்டுகோளைக் கேட்டுக் கவனிப்பதாகக் கூறியிருக்கிறார்.

மொழிச் சிக்கல், முழு அளவிற்கு வெறி ஏறிப்போயிருக்கிற நேரம் இது!

தமிழ் மொழியின் பெருமை, எங்களை விடவா காமராசருக்குத் தெரியப்போகிறது?

காமராசர் சொன்னதை மத்திய அரசு மதிக்கவில்லை; அதைக் கண்டித்து, காங்கிரசுக்காரர்கள் ஒரு வார்த்தையாவது பேச வேண்டாமா?

முரசொலி மாறனுக்குப் பதவி வேண்டும் என்பதற்காக நாம் போட்டியிடவில்லை! பதவிக்காக அல்ல மாறன்—தமிழ் மொழியைக் காப்பாற்ற மாறன்!

காமராசர் இங்கே இந்தி படிக்கச் சொல்கின்றார்; வட நாட்டில் யாராவது தமிழ் படிக்கச் சொல்கிறார்களா என்றால் இல்லை!

இந்த நாட்டு மக்கள் இந்தியைப் படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த யாருக்கும் உரிமை கிடையாது! ஆனால், படிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் யாரையும் நாங்கள் தடுக்கவில்லை!

சேத் கோவிந்த தாஸ், 'தமிழ்நாட்டில் இந்தியை ஏற்றுக்கொள்ளாவிட்டால் இராணுவத்தை அனுப்பியாவது ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார். இதற்கு காமராசர் என்ன பதில் சொல்ல இருக்கிறார்?

இந்த ஒரு பேச்சை நாங்கள் பேசினால் போதும்—அடுத்த முறை ஒரு காங்கிரசுக்காரர் கூட வர முடியாது!

காங்கிரசுக்காரர்களுக்கு ஓட்டுக் கேட்க உரிமை இருந்தால் இந்த ஒரு கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டுக் கேட்கட்டும்!

இராணுவத்தை அனுப்ப முடியுமா உங்களால்? மிரட்டிப் பார்த்தால் நடக்கிற காரியமா?

இராணுவம் புறப்படுவதற்கு முன்பு அங்கிருக்கும் எங்களுக்குப் பதில் சொல்லிவிட்டு அல்லவா புறப்பட வேண்டும்?

ஆட்சிமொழியாக இந்தி வர வேண்டுமென்று கூறுபவர்கள் யாராவது இங்கே இருந்தால் கைதூக்குங்கள்—நான் பதில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்."

சென்னை 33-வதுவட்ட மக்கள் மறுமலர்ச்சி மன்றம்

மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டம் 3—10—67 அன்று நடைபெற்றது; அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : எஸ். சிவா ; செயலாளர் : எஸ். கோதண்டபாணி ; துணைச் செயலாளர் : சுப்பிரமணி ; பொருளாளர் : சி. கே. உன்னி ; செயற்குழு உறுப்பினர்கள் : தனகோட்டி, இரங்கநாதன், மணி, கோதண்டன், சிம்மாசலம்.

உசிலம்பட்டியில் உணவு அமைச்சர்

கழகச் சார்பில் சிறப்பான வரவேற்பு

2—10—67 பகல் 11 மணிக்கு உசிலம்பட்டிக்கு வந்த உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு நகர் தி.மு.க. சார்பாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அமைச்சர், நகர் எல்லைக்குள் வந்தவுடன் அதிர்வேட்டு முழங்கியது.

அமைச்சருக்கு நகர் தி.மு.க. செயலாளர் பி. எஸ். மணியம், மாவட்டப் பிரதிநிதி இரா. தேவராசன் பல்வேறு மன்றங்கள்—கிராம மக்கள் — சுற்றுப்புறக் கிளைக் கழகங்கள் சார்பிலும் மலர் மாலைகளும் கைத்தறியாடைகளும் அணிவிக்கப்பட்டன.

அமைச்சருடன் தொகுதி எம்.எல்.ஏ. மூக்கையா (தேவர்), கூடலூர் இராசாங்கம் எம்.எல்.ஏ. ஆகியோர் வந்திருந்தனர்.

செங்கத்தில் எம். ஜி. ஆர். மன்றம்

27—9—37 அன்று செங்கம் நகரில், பேரூராட்சித் தலைவர் அ. ந. அரங்கநாதன் தலைமையில் எம். ஜி. ஆர். மன்றம் துவக்கப்பட்டு, கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : செ. த. வ. முருகன் ; செயலாளர் : சு. கணேசன் ; துணைச்செயலாளர் : இராமன் ; பொருளாளர் ; சி. வி. மணி ; நகரக் கழகப் பிரதிநிதி : ஏ. சுந்தரமூர்த்தி ; மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

சென்னை 92-வது வட்ட மக்கள் முன்னேற்ற மன்றம்

சென்னை 92-வது வட்ட மக்கள் முன்னேற்ற மன்றம் (இணைப்பு : சிவலிங்கம் நினைவுப் படிப்பகம்) நிர்வாகிகள் தேர்வு, வட்ட தி.மு.க. செயலாளர் செ. கண்ணப்பன் தலைமையிலும் — சா. கணேசன் எம்.சி., மாவட்டப் பிரதிநிதி சோ. கி. மூர்த்தி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

அவைத் தலைவர் : ஈ. என். சீனிவாசராகவன் ; செயலாளர் : து. ச. இளமாறன் ; துணைச் செயலாளர் : ஆர். பசுமலை ; பொருளாளர் : மு. பலராமன் ; 9 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

பம்பாய்ச் செய்திகள்

அண்ணா பிறந்த நாள் விழா

பம்பாய்—தாராவி மனோகரன் மன்றச் சார்பில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா தோழர் யு. எஸ். செல்லையா தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, நெல்லை வளவன், ஜே. என். அமிர்தலிங்கம் குடியரசுக் கட்சித் தோழர் ஆறுமுகம் உட்பட பலர் வாழ்த்துரை வழங்கினர். இனிப்பு வழங்கப்பட்டது.

பம்பாய் — கம்பாலாக்குன்று தி.மு.க. கிளைச் சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா சீருஞ்சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது. தோழர் அ. பெரியசுந்தரம் தலைமையில் எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, சி. நா. சிதம்பரம், நா. பா. அரங்கண்ணல், வள்ளி மணாளன் உட்பட பலர் கருத்துரை வழங்கினர். நள்ளிரவு 12 மணி வரை நடைபெற்ற அக்கூட்டத்தில் பகுதிவாழ் தோழர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இனிப்பு வழங்கப்பட்டது.

அரூர் முத்து வருகை

பம்பாய்—தாராவி தி.மு.க. சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அரூர் முத்து அவர்களுக்கு வரவேற்புக் கூட்டம் 'திராவிடரக'த்தில் நடைபெற்றது; செயலாளர் த. மு. பொற்கோ வரவேற்புரை ஆற்ற—அவைத் தலைவர் பி. எஸ். செல்லையா தலைமையில் தோழர்கள் எஸ். தியாகராசன், எல். என். செழியன், சிதம்பரம் எம். சின்னப்பா ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

அரூர் முத்து அவர்கள், இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு மாநிலங்களில் அமைந்துள்ள சூழ்நிலைகளோடு தமிழக நிலையையும், மராட்டியத்தில் வாழும் தமிழர்களின் நிலையையும் எடுத்துரைத்து அரியதோர் உரை நிகழ்த்தினார்.

தெய்வீகன், மாயவன் வருகை

பம்பாய்க்கு வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெய்வீகன், மாயவன் ஆகியோரை பம்பாய் தி. மு. கழகத் தோழர்கள் எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, எம். சின்னப்பா, சி. இரவீந்திரன் உட்பட பலர் சென்று சந்தித்து அளவளாவினர்.

செ. கந்தப்பன் எம்.பி.

நாடாளுமன்ற மதிப்பீட்டுக் குழு உறுப்பினர் தோழர் செ. கந்தப்பன் அவர்கள் பம்பாய் அலுவலையும், தாராவி தி. மு. கழகச் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அண்ணா பிறந்த நாள் விழாவிலும் கலந்துகொண்டு 2—10—67 காலை போர்பந்தர் பயணமானார். தோழர்கள் எஸ். தியாகராசன், த. மு. பொற்கோ, சிதம்பரம் உட்பட பலர் சென்று வழியனுப்பிவைத்தனர்.

அண்ணா பிறந்த நாள் விழாவில் ச. சோ. கட்சி எம்.பி.

பம்பாயில், அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா பம்பாய்—தாராவி தி.மு.க. சார்பில் 1-10-67 மாலை 7 மணியளவில் கணேசர் கோயில் திடலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தாராவி தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் எம். எஸ். முத்து வரவேற்புரையாற்றினார்.

தாராவி தி.மு.க. செயலாளர் த. மு. பொற்கோ தலைமைதாங்கினார்.

பம்பாய் தி. மு. கழக அமைப்புக்கு மூலகாரணமாய் அமைந்த தோழர்களில் ஒருவரான தோழர் ம.இரா.எ. இரத்தினசாமி, அறிஞர் அண்ணா அவர்கள் படத்தைத் திறந்துறைத்தார்.

ச. சோ. கட்சியைச் சார்ந்த மீரத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் மகராஜ் சிங் பாரதி, அண்ணாவின் ஆற்றலைப் பலபட பாராட்டியும், தமிழக அரசின்

சேலம் மாவட்ட தி.மு.க. தொழிற்சங்கம்

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் முடிவு

1—10—67-ல், மேட்டூர் அணை பாப்பம்மாள் திருமண மண்டபத்தில் சேலம் மாவட்ட தி. மு. க. செயலாளரும் மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத் தலைவருமான ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் சேலம் மாவட்ட தி.மு.க. சார்புத் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளின் கூட்டம் நடைபெற்றது. மாவட்டம் முழுவதிலுமிருந்தும் 300-க்கு மேற்பட்ட பல்வேறு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கோவை தொழிற்சங்கத் தலைவர் காட்டூர் கோபால், திரு. ஜி. பி. சோமசுந்தரம் எம்.பி. திரு. கே. ஆர். கோவிந்தன் பி.ஏ. பி.எல்., எம்.எல்.ஏ. ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அதுசமயம், சேலத்தில் மாவட்டத் தொழிற்சங்கம் அமைப்பது என்றும், அதற்கு ஒரு கட்டிடம் வாங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தொழிற்சங்கங்கள் இல்லாத பகுதிகளில் முதலில் சங்கம் அமைக்க முடிவுசெய்யப்பட்டது.

மாவட்டத்திலுள்ள தொழிற்சங்கங்களைச் சேர்த்து மாவட்டக் கவுன்சில் அமைப்பது என்றும், மாவட்டத்திலுள்ள தொழிற்சங்கங்களுக்கும், இனி புதியதாக அமையும் தொழிற்சங்கங்களுக்கும் தொடர்ந்து சட்ட ஆலோசகராகவும், தலைவராகவும் இருக்க வேண்டுமென காட்டூர் கோபால் அவர்களைக் கேட்டுக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

வட்டச் செயலாளர் அ. பாலு நன்றி கூறினார்.

சென்னை 3வது வட்டம் மக்கள் மறுமலர்ச்சி மன்றம்

சென்னை—இராயபுரம் மக்கள் மறுமலர்ச்சி மன்ற இடைத் தேர்தல், 3-வது வட்டத் துணைச் செயலாளர் தலைமையில் 1—10—67-ல் நடைபெற்றது.

மன்றத் தலைவராக பி. சொக்கலிங்கம்; செயலாளராக ஜி. இருதயராஜ்; பொருளாளராக பி. அழகுவேல்; செயற்குழு உறுப்பினர்களாக க. ரத்தினசாமி, எம். கோவிந்தசாமி, கோபால், திருவேங்கடம், எம். ரெங்கன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சீரிய ஆட்சி முறையைப் புகழ்ந்தும், சிவசேனாவின் நெறி தவறிய முறைகேடான செயல்பாடுகளை வன்மையாகக் கண்டித்தும் பேசினார்.

செ. கந்தப்பன்

பின், தோழர் செ. கந்தப்பன் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களின் வியத்தகு ஆற்றலையம், ஆட்சித் திறனையும், அமைப்பைக் கட்டிக் காக்கும் பாங்கினையும், சொல்லாற்றலையும், இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள தலைவர்கள் அண்ணாவைப் பாராட்டிச் சூட்டியுள்ள புகழாரங்களையும் எழில்பட எடுத்துரைத்து, மராட்டிய மாநிலத்தில் உள்ள தமிழர்களுக்கு—தென்னவர்களுக்கு எதிராக அமைந்துள்ள 'சிவசேனா' அமைப்பை வன்மையாகக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினார்.

ஆமதாபாத் தி.மு.க. செயலாளர் வை. ஆறுமுகம் சொற்பொழிவாற்றினார்.

தோழர்கள் நெல்லை வளவன், பொருளாளர் எம். சின்னப்பா ஆகியோர் பேற்பார்வையில் மேடை அலங்காரங்கள் சீராக அமைந்திருந்தன.

அண்ணா படிப்பகம்—அபுபக்கர் சாலில் தோழர் கந்தப்பன் கொடியேற்றிவைத்தார்.

ஒரே நாளில் ஏற்பாடு செய்த இக்கூட்டத்தின் வெற்றிக்குத் தோழர்கள் கலைச்செல்வன், நெல்லை வளவன், பொருளாளர் சின்னப்பா, காதர்மைதீன் உட்பட பலர் கண்ணும் கருத்துமாகப் பணியாற்றினர்.

நடக்க இருப்பவை

12--10--67

வெள்ளகோயில்

தாரை வட்ட விவசாயிகள் முன்னேற்றச் சங்கச் சார்பில் மாலை 6 மணிக்கு அண்ணு திடலில்; தலைவர்: கிருஷ்ணன்; பேசுவோர்: அக்காமலை இராமசாமி எம்.எல்.ஏ., இரா. மாணிக்கம் எம்.எல்.ஏ., திருப்பூர் துரைசாமி எம்.எல்.ஏ., மே. சி. தூயமணி, மு. பழனிச்சாமி, பரமத்தி சண்முகம், அத்தாணி பாபு, கலைமணி.

திண்டுக்கல்

4-வது வட்டார தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு சொசைட்டி தெருவில்; தலைவர்: க. மைக்கேல்; பேசுவோர்: நெல்லை மாறன், செ. தம்பித்துரை, க. அங்குசாமி எம்.சி., பொன். சீனிவாசன், க. வே. வி. இராசன், மு. காதர்சா பி.ஏ,

சென்னை 22-வது வட்டம்

அண்ணு படிப்பகச் சார்பில் மாலை 6-மணிக்கு முத்தையா முதலி தெருவில் (மகாராஜா டாக்கீஸ் அருகில்); தலைவர்: ம. கோ. சொக்கலிங்கம்; பேசுவோர்: அமைச்சர் கோவிந்தசாமி, கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., வேலூர் நாராயணன் எம். ஏ. பி. எல்., எம். சி., புலவர் பொன்னிவளவன், ம. மோகனரங்கம் எம்.சி.

சென்னை 50-வது வட்டம்

அண்ணு அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு புரசை சண்முகராய பிள்ளை வீதியில்; தலைவர்: இரா. இராமாநுசம்; பேசுவோர்: அமைச்சர் சாதிக்பாட்சா; வி.எஸ்.கோவிந்தராசன் எம்.எல்.ஏ., எம். குமார்.

ஈரோடு

23, 27-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு ஆரோக்கியசாமி திடலில்; தலைவர்: கே. இராசு; பேசுவோர்: ப. ச. விசுவநாதன், மா. சுப்பிரமணியம் பி.ஏ.பி.எல்., டாக்டர் சேதுபாஸ்கரன், சி. பொன்னுசாமி, மு. ப. இராமலிங்கம் (குமாரி விசயாவின் கலைநிகழ்ச்சி நடைபெறும்.)

13--10--67

கூத்தாநல்லூர்

தி.மு க. சார்பில் மாலை 6-30 மணிக்கு ஏ.பி.என். குளக்கரையில்; தலைவர்: இரெ. தங்கராசு; பேசுவோர்: நன்னிலம் அ. நடராசன், மன்னை நாராயணசாமி, சு. தென்கோவன், கு. பாலகிருட்டினன், ஜெயராமன்.

ரோஜா பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

தென் சென்னை வாக்காளர்களுக்கு அறிஞர் அண்ணு வேண்டுகோள்

உங்களை நம்பி தம்பி மாறன்--

எனக்குத் தந்த வெற்றியை அவருக்குத் தாருங்கள்!

தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்காக நடைபெறும் இடைத்தேர்தலில் என் அருமைத் தம்பி மாறனை, உங்களை நம்பி—உங்கள் நல்லெண்ணத்தை நம்பி—உங்களது சலியாத உழைப்பை நம்பி—உங்களது நேர்மைப் பற்றை நம்பி நிறுத்தி வைத்திருக்கிறேன்.

தம்பி மாறன் இதுவரை மிகவும் அமைதியான முறையில் கழகத்திற்குத் தொண்டாற்றி வந்தவர். அவரை நான் தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலுக்கு நிறுத்திவைத்திருக்கிறேன். அதிலிருந்தே, அமைதியாக இருப்பவர்கள் மீது எனக்கிருக்கின்ற அக்கறை உங்களுக்குப் புரியும் என்று நம்புகிறேன்.

அமைதியிலே இரண்டு வகை உண்டு; ஒன்று—விவரம் தெரியாமலிருக்கிற அமைதி; இன்னொன்று—எல்லா விவரங்களையும் தெரிந்து இருக்கும் அமைதி. தம்பி மாறனின் அமைதி, எல்லா விவரங்களையும் தெரிந்து இருக்கும் அமைதி!

பாத்திரத்தில் பால் இல்லாதபோதும் அமைதியாக இருக்கும்—பால் கொதித்து அடங்கிய பிறகும் அமைதியாக இருக்கும். தம்பி மாறனின் அமைதி, கொதிக்கவேண்டிய அளவு கொதித்து அடங்கிய பாலின் அமைதி!

தம்பி மாறன், நல்லிளைஞர்—எழுத்தாளர்—நல்ல பேச்சாளர்—என்பதை இப்போது மாறன் பேசியபோது அறிந்திருப்பீர்கள்!

அது மட்டுமல்ல; உணர்வறிந்த நாள்முதலாய் பொதுத் தொண்டில் ஈடுபட்டவர்; கழகத்தின் நற்காரியங்களில் ஈடுபட்டவர்; எம்.ஏ.-வரை படித்தவர்; நாடாளுமன்றம் செல்வதற்கு எல்லாத் தகுதியும் திறமையும் பெற்றவர்.

இந்தத் தென் சென்னையில் வெற்றி பெறும் வாய்ப்பை எனக்குக் கொடுத்தீர்கள்; ஆனுலும் நான் கொடுத்துவைக்காதவன்; அந்த இடத்திற்குப் போக முடியாமல் தமிழகத்தின் அரசியல் சூழ்நிலை தடுத்துவிட்டது!

எனக்கு நீங்கள் தந்த வெற்றியை மாறனுக்கும் தந்து தென் சென்னையின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தி. மு. கழகத்திற்குத்தான் என்றுக்க வேண்டும்!

தி. மு. கழக அரசு நடைபெறுகிற காரணத்தால்—அதன் சாதனைகளை எடுத்துக்கூறி, 'ஆகவே, வெற்றியைத் தேடித் தாருங்கள்'—என்று சுலபமாகக் கேட்டுவிட முடியும். ஆனுல், ஆட்சியில் இல்லாதிருந்தபோது எந்த நோக்கோடு என்னை தென் சென்னைக்குத் தேர்ந்தெடுத்தீர்களோ—எந்த நோக்கத்தோடு அன்பழகனும், மனோகரனும் உட்பட 24 தி. மு. கழகத் தோழர்கள் டில்லியில் பணியாற்றுகிருர்களோ—அதே நோக்கத்தோடு மாறனை அனுப்புங்கள்!

தமிழகத்தின் உரிமைகளை அங்கே தட்டிக்கேட்கவும், உண்மையான சனநாயகத்தை நிலைநாட்டவும், உலகப் பிரச்சினைகளை ஆராய்ந்து காட்டவும், தமிழக அரசு எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு டில்லியில் உறுதுணையாக இருக்கவும் இந்த நல்லிளைஞரை நீங்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்பவேண்டும்.

இந்த நேரத்தில் ஒன்றே ஒன்றைச் சொல்லிக் கொள்வேன்; காங்கிரசுத் தலைவர் காமராசர், நான் எதற்கெடுத்தாலும் மத்திய அரசுமீது பழிபோடுவதாகச் சொல்கிருர். மத்திய அரசுக்கும்—மாநில அரசுக்குமுள்ள தொடர்புகளைப் பற்றி நான் பேசுவதைத்தான், அவர், பழி போடுவதாகக் கூறுகிருர்!

மத்திய அரசுக்கும்—மாநில அரசுக்கும் நல்ல தொடர்பு இருக்கவேண்டுமானுல், 'நாட்டு மக்கள் மாநில அரசு பக்கம் இருக்கிருர்கள்' என்பதை நாம் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அப்படி நாம் உணர்த்தி அவர்கள் அறிந்து கொண்டால்தான், மத்திய அரசுக்கும்—மாநில அரசுக்குமுள்ள தொடர்பு சரியாக இருக்க முடியும்! அந்தவகையில், மாறன் பெறப்போகும் வெற்றி, 'தட்டிக் கேட்கிற மக்கள் தமிழ் நாட்டில் இருக்கிருர்கள்' என்பதை அவர்[illegible]நக்கு உணர்த்தும்!

"'எங்கே பார்த்தாலு[illegible] நாம்தானே வெற்றி பெற்றிருக்கிரோம்?' என்று எண்ணி[illegible]ருந்துவிடக் கூடாது. சென்ற தேர்தலில் காட்டிய சுறுசுறு[illegible]ப்பு—விறுவிறுப்பு—வேகம்—வீதி வீதியாகச் சென்று உழைத்[illegible] தன்மையை மறந்துவிடாமல், அதே விறுவிறுப்பை—சுறுசு[illegible]ப்பை இந்தத் தேர்தலில் நீங்கள் காட்டவேண்டும்!

ஐயம்பேட்டை ஊராட்சியில் அண்ணு, நெடுஞ்செழியன் ஆகியோருக்கு வரவேற்பு

ஐயம்பேட்டை ஊராட்சி மன்றச் சார்பில், 12—10—67 மாலை, முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கட்கும், கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கும் வரவேற்பிதழ் படித்தளிக்கப்படும்.

படத் திறப்பு விழா

11—10—67 மாலை 6 மணிக்கு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் பாரதியார் படத்தையும்' சட்டப் பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனுர் அவர்கள் அமைச்சர் கருணுநிதி படத்தையும், பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் அவர்கள், கல்வியமைச்யர் இரா. நெடுஞ்செழியன் படத்தையும் திறந்து வைப்பார்கள்.

ஐயம்பேட்டை அரசினர் உயர்நிலை பள்ளி

அண்ணு திறந்துவைக்கிருர்

ஐயம்பேட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா 12-10-67 மாலை 6 மணிக்கு கலவியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெறும்; முதலமைச்சர் அண்ணு அவர்கள் திறந்துவைப்பார்; தோழர்கள் சி.வி.எம். அண்ண[illegible]லை எம்.எல்.ஏ., கே. எம். இராசகோபால் எம்.எல்.ஏ., வி.சி. சம்பந்தம் பி.ஏ., பி. வெங்கடசுப்பிரமணியம் எம்.ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மாறனை ஆதரித்துத்

தேர்தல் பிரசாரத் துவக்கம்

'மாலை மணி' நாளிதழ் வெளியீட்டு நிகழ்ச்சி

அண்ணு மற்றும் கழகத் தலைவர்கள் பங்கேற்ற பெருவிழா

சேன்னை, அக். 10—

தேன் சேன்னைத் தோகுதித் தேர்தல் பிரசாரத் துவக்க விழாவும் 'மாலை மணி' நாளிதழ் வேளியீட்டு விழாவும் நேற்று மாலை தேனும்பேட்டை போக் ரோடு திடலில் சிறப்பாக நடைபெற்றது.

முன்னுள் துணைமேயர் என்.எஸ். தேவராசன் தலைமையில் நடந்த இந்தப் பொதுக்கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர்,

முதலமைச்சர் அண்ணு அவர்கள், கழக வேட்பாளர் முரசொலி மாறனின் அருமை பெருமைகளை எடுத்துச் சொல்லி, அவருக்கு வெற்றி தேடித் தருமாறு வேண்டிக் கொண்டார்கள்.

'மாலை மணி' நாளிதழை வெளியிட்டு, நமது ஏடுகள் எப்படித் தரத்தோடு இருக்க வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டி வலியுறுத்தினுர்கள்; 'கடுமையைக் குறைத்துக் கனிவோடு எழுத வேண்டும்' என்று அறிவுரை கூறினுர்கள்.

'மாலை மணி'யின் முதல் இதழை, திரு. இராதாகிருஷ்ணன், ரூ. 101 கொடுத்து அண்ணு அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

'மாலை மணி' ஆசிரியர் பி. எஸ். இளங்கோ, தேர்தல் நிதிக்காக அண்ணு அவர்களிடம் ரூ. 101 அளித்தார்.

அண்ணு அவர்களுக்கு முன்னதாகவே அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி., கி. மனோகரன் எம்.பி., சி. டி. தண்டபாணி எம்.பி., இராம அரங்கண்ணல் எம்.எல்.ஏ, நீல நாராயணன், மன்னை நாராயணசாமி, முன்னுல் மேயர்கள் எஸ். கிருஷ்ணமூர்த்தி, மைனர் மோசஸ், மாநகராட்சி மத்திய குழுத் தலைவர் இரா. சடகோபன், டி. கே. பொன்னுவேலு பி.ஏ., வெ. கண்ணன், ஆகியோர் முரசொலி மாறனின் சிறப்பியல்புகளையும் அறிவாற்றலையும் எடுத்துரைத்து—கழக ஆட்சியின் ஏழு மாதச் சாதனைகளையும் சுட்டிக்காட்டி—தி. மு. க. வெற்றி பெற ஆதரவளிக்குமாறு வாக்காளப் பெருமக்களைக் கேட்டுக் கொண்டனர்.

தோழர் முரசொலி மாறனும், தன்னை வேட்பாளராகத் தேர்ந்தெடுத்த அண்ணு அவர்களுக்கும், தனக்கு ஆதரவு அளிக்கும் இராஜாஜி, காயிதே மில்லத் போன்ற தலைவர்கட்கும், நன்றி தெரிவித்துக்கொண்டு, தன்னை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு வாக்காளப் பெருமக்களைக் கேட்டுக் கொண்டார்.

வெல்ல ஏற்றுமதிக்குத் தடை

தமிழக அரசு யோசனை

கோவை, அக். 9—

மகாராட்டிர அரசு செய்திருப்பதுபோல் வெல்லமு[illegible] பனைவெல்லமும் இந்த மாநி[illegible]த்தைவிட்டு வெளியே செல்வதைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டமொன்று அரசின் தீவிர ஆய்வில் இருப்பதாக உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் கூறினுர்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்தப் பொருள்களின் விலை இப்போது மிக அதிகமாக இருக்கிறது. இவற்றின் விலைகளைக் குறைக்க இந்த நடவடிக்கை மிகவும் அவசியமாகும்.

இவற்றிற்குத் தடை விதிப்பதற்காக மத்திய அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காக சென்ற இரண்டு நாட்களாக அதனுடன் தமிழக அரசு தொடர்புகொண்டு வருகிறது."

சி. பி. சிற்றரசு

வேண்டுகோள்

"நான், தென் சென்னைத் தொகுதி நாடாளுமன்றத் தேர்தல் பொதுக்கூட்டங்கள் பலவற்றில் கலந்துகொள்ள வேண்டியிருப்பதால், அக். 16-ம் நாள், முதல் நவம்பர் 1-ம் நாள் வரையில் வெளியூர்களுக்கு தேதி வாங்கியிருக்கும் நண்பர்கள், கூட்டங்களுக்கு விளம்பரப்படுத்தாமல் இருக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்"

என்று திரு. சி. பி. சிற்றரசு எம்.எல்.சி. அறிவிக்கிருர்.

அண்ணு வேண்டுகோள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றதும், டில்லியிலுள்ளவர்கள், புதுப் பார்வையே பார்க்கிருர்கள்!

தம்பி மாறன், பொருளாதாரத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றவர்! பாராளுமன்றத்தில் சென்று நமக்காக வாதிடக்கூடியவர்!

அவரைப் போன்ற இளைஞர்கள்—மனோகரனைப் போன்ற வல்லவர்கள்—அன்பழகனைப் போன்ற நல்லவர்கள் நாடாளுமன்றம் சென்றுல், நமக்குத் தனி மதிப்பே ஏற்படும்!

தமிழக அரசின் புகழ்—மதிப்பு—மங்காதிருக்க வேண்டுமானுல் நாம் மாறனை வெற்றி பெறச் செய்யவேண்டும்.

'தி. மு. கழகம் வெற்றி பெற்றுவிடும்; கவலை வேண்டியதில்லை' என்று வேலை செய்யாமல் இருக்கக்கூடாது.

'முயற்சி திருவினையாக்கும்' என்றுதான் வள்ளுவர் கூறியிருக்கிருர்; 'நாம் உழைக்கும் உழைப்பைப் பார்த்து தெய்வமே துணைக்கு வரும்' என்று கூறியிருக்கிருர்.

ஆகவே, அத்தகைய விடா முயற்சியுடன் உழைத்து, தம்பி தாறனுக்கு—தி. மு. கழகத்துக்கு—வெற்றி தேடித் தரவேண்டும்."

அறிவிப்பு

எல்லாவிதமான வேஸ்ட் பேப்பர்களும் வாங்கவும் விற்கவும் சென்னையில் சிறந்து விளங்கும்

தமிழக அரசுத் தலைமைக் காரியாலய வேஸ்ட் பேப்பர் குருப் I, குருப் III இவைகளுக்குச் சிட்டி காண்டிராக்டர்கள்--

G. O. No. Pr. 708/SBC. 1—8—67

G. O. No. Pr. 710/SBC. 1—10—67

ஸ்ரீ குகன் வேஸ்ட் பேப்பர் கம்பெனி

2/10, ஸ்ரீரங்கம்மாள் தெரு, வண்ணையம்பதி, சென்னை-21

தொலைபேசி எண்—ஆபீஸ்: 53877; வீடு: 53023

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13. [illegible]